பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி - சென்னை - 4
10.08.2025 SUNDAY 6.45 AM
வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இல்லந்தோறும் மூவர்ணக் கொடி ஏற்றும் இயக்கத்தில் நாடுமுழுவதும் பொதுமக்கள் அதிக அளவில் பங்கேற்பது உற்சாகம் அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. கடந்த 6 ஆண்டுகளில் ஒரு தேர்தலில் கூட போட்டியிடாத 334 அரசியல் கட்சிகளின் பதிவை தேர்தல் ஆணையம் ரத்து செய்துள்ளது.
3. இந்திய பொருட்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள புதிய வரி உயர்வு விஷயத்தில் மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழக அரசு உறுதுணையாக இருக்கும் என்று மாநில தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா கூறியுள்ளர்.
4. தருமபுரி மாவட்டத்தில் ஓகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் இரண்டாவது கட்ட பணிகள் விரைவில் தொடங்கும் என்று மாநில அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.
5. 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச்சுற்று போட்டியில் இந்தியா இன்று மியான்மரை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

இல்லந்தோறும் மூவர்ணக் கொடி ஏற்றும் இயக்கத்தில் நாடுமுழுவதும் பொதுமக்கள் அதிக அளவில் பங்கேற்பது உற்சாகம் அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுகுறித்து பதிவிட்டுள்ள அவர், இதுபோன்ற நிகழ்வு, நாட்டு மக்களை ஒன்றிணைக்கும் என்று கூறியுள்ளார்.

வடக்கே கஷ்மீர் முதல் தெற்கே லட்சத்தீவுகள் வரையும், மேற்கே குஜராத் முதல் கிழக்கே சிக்கிம் வரையும் இந்த இயக்கம் உற்சாகமாக நடைபெற்று வருவது குறித்த புகைப்படங்களை பார்க்கும் போது மகிழ்ச்சி அளிப்பதாகவும், ஒவ்வொரு இந்தியரும் தேசியக்கொடியுடன் தங்களுக்கு உள்ள தொடர்பை பெருமையுடன் வெளிப்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தீவிரமான தேசபக்தி உணர்வு, மூவர்ணக் கொடியின் மீது அவர்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத பெருமையை காட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

hargartiranga.com என்ற இணையதளததில் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் பங்கேற்கும் புகைப்படங்களை பதிவேற்றம் செய்யுமாறும் நாட்டு மக்களை பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

கடந்த 6 ஆண்டுகளில் ஒரு தேர்தலில் கூட போட்டியிடாத 334 அரசியல் கட்சிகளின் பதிவை தேர்தல் ஆணையம் ரத்து செய்துள்ளது.

இந்த கட்சிகள், தேர்தல் ஆணையத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை என்றும், இந்த கட்சிகளுக்கு நாட்டின் எந்தப் பகுதியிலும் கட்சி அலுவலகங்கள் இல்லை என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நடவடிக்கை காரணமாக, தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 854லிருந்து 2 ஆயிரத்து 520ஆக குறைந்துள்ளது.

>>>>>><<<<<<

இந்திய பொருட்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள புதிய வரி உயர்வு விஷயத்தில் மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழக அரசு உறுதுணையாக இருக்கும் என்று மாநில தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா கூறியுள்ளார்.

திருவாரூரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, இந்தப் பிரச்சினைக்கு சரியான முடிவை மேற்கொள்ளும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கும் மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் குறுகிய காலத்தில் முதலீடுகளை பெற்று, விரைவாக தொழிற்சாலைகளை திறந்து, வேலைவாய்ப்புகளை மாநில அரசு ஏற்படுத்தி தருவதாகவும் திரு. டி.ஆர்.பி. ராஜா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகம் முழுவதும் சுகாதாரத் துறையின் சார்பில் நடத்தப்பட்டு வரும் நலன் காக்கும் திட்ட முகாம்கள் மூலம், 48 ஆயிரத்து 418 பேர் பயனடைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம் அரசு உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற முகாமை நேற்று பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

ஒவ்வொரு முகாமிலும் ஏராளமான பொதுமக்கள் உடல் பரிசோதனை செய்து கொள்ளும் போது, எதிர்காலத்தில் ஏற்படும் நோய் பாதிப்புகளை கண்டறிந்து, தடுக்க மருத்துவ அறிக்கை வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

*அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் போதிய அளவில் பணியமர்த்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*தருமபுரி மாவட்டத்தில் ஓகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் இரண்டாவது கட்ட பணிகள் விரைவில் தொடங்கும் என்று மாநில அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.*

*தருமபுரியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாவட்டத்தில் ஆயிரத்து 743 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற பணிகளை வரும் 17ஆம் தேதி முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கவுள்ளதாக கூறினார்.*

*871 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய பணிகளுக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*தருமபுரி மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான சிப்காட் மற்றும் பெண்ணாய்ப்பட்டி ரயில்வே மேம்பாலப் பணிகளுக்கும் விரைவில் அடிக்கல் நாட்டப்படும் என்றும் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் கூறினார்.*

*>>>>>><<<<<<*

*வடகிழக்கு பருவமழையின் போது, சென்னையில் வெள்ள பாதிப்புகளை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு, மாநில தலைமைச்செயலர் திரு. முருகானந்தம் அறிவுறுத்தியுள்ளார்.*

*நீர்வளத்துறை, மாநகராட்சி, சென்னை குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றின் சார்பில், மாநகரின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் கால்வாய் புனரமைப்பு மற்றும் குளங்கள் தூர்வாருதல், புதிய குளங்களில் நீரின் கொள்ளளவை அதிகரித்தல் உள்ளிட்ட பணிகளை நேற்று அவர் ஆய்வு செய்தார்.*

*பள்ளிக்கரணை சதுப்புநிலத்தை சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளத்தை தணிப்பதற்காக தெற்கு பக்கிங்காம் கால்வாயிலிருந்து கடல்வரை நேரடியாக 91 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் கால்வாய் பணிகள் விரைந்து முடிக்ககப்படும் என்று அவர் கூறினார்.*

*கடந்த காலங்களில் வேளச்சேரி, விஜயநகர், ராம்நகர், பள்ளிக்கரணை, செம்மஞ்சேரி, நாராயணபுரம், பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளில் பெய்த மழை நீரால் வெள்ள பாதிப்பு*

ஏற்பட்டதாகவும், தற்போது அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத்தடுப்பு பணிகளால், தென்சென்னையில் வெள்ள பாதிப்பு குறையும் என்றும் திரு. முருகானந்தம் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

அனைவருக்கும் வங்கிக் கணக்கு துவங்கியதன் மூலம், வங்கித் துறையில் மிகப் பெரிய புரட்சி ஏற்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் திரு. சுவாமிநாதன் ஜானகிராமன் கூறியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், திருக்கண்டலம் கிராமத்தில் இந்தியன் வங்கி ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - சுவாமிநாதன் 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

அர்மேனியா – அஸர்பைஜான் இடையே ஏற்பட்டுள்ள அமைதி உடன்படிக்கையை வரவேற்பதாக ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

அமெரிக்காவுக்கான இந்திய தூதர் திரு. வினெய் மோகன் க்வாட்ரா, எரிசக்தி பாதுகாப்பு தொடர்பாக அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. Lindsey Graham -முடன் பேச்சுக்கள் நடத்தினார்.

>>>>>><<<<<<

விமானப்படையை எதிர்கால தேவைக்கேற்ப நவீனப்படுத்துவது அவசியம் என்று ஏர்சீப் மார்ஷல் எல்.எம். கத்ரே கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

பஞ்சாப் மாநிலத்தில் சர்வதேச எல்லையை ஒட்டியுள்ள பெரோஸ்பூர் பகுதியில் போதைப்பொருளை எல்லைப் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர்.

>>>>>><<<<<<

ரயில்பாதை பராமரிப்புப் பணிகள் காரணமாக, சென்னை சென்ட்ரல் – அரக்கோணம் வழித்தடத்தில் கடம்பத்தூர் - திருவவேங்காடு இடையே இன்று காலை மணி 7.30 வரை ரயில் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே மேகமலை வனச்சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் யானைத் தந்தங்களை கடத்தி விற்பனை செய்த 5 பேரை வனத்துறையினர் கைது செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

>>>>>><<<<<<

ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ஒரு டன் எடை கொண்ட சுக்கை, வாகனத்துடன் காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்

>>>>>><<<<<<

மதுரை அழகர்கோவில், 18ஆம் படி கருப்பண்ணசாமி கோவிலில் ஆடிப்பெருவிழாவின் முக்கிய நிகழ்வான திருக்கதவுகள் திறப்பு நிகழ்ச்சி நேற்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் உள்ள பழமைவாய்ந்த ஹஜ்ரத் சையது அதாவுல்லா ஷா தர்கா சந்தனக்கூடு உரூஸ் பெருவிழா நேற்று வெகுவிமரிசையான நடைபெற்றது.

>>>>>><<<<<<

மாநகராட்சியின் தூய்மைப் பணிகளை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி சென்னையில் நேற்று அளிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

**விளையாட்டுச் செய்திகள்**

20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச்சுற்று போட்டியில் இந்தியா இன்று மியான்மரை எதிர்கொள்கிறது.

மியான்மரில் இப்போட்டி பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது

>>>>>><<<<<<

சென்னையில் நடைபெற்று வரும் சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் மூன்றாவது சுற்றில், இந்தியாவின் அர்ஜுன் எரிகேஸி வெற்றி பெற்றுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அவர் அமெரிக்காவின் Ray Robson-ஐ வென்றார்.

இதனால் இரண்டரை புள்ளிகளை பெற்றுள்ள அர்ஜுன் எரிகேஸி, இப்போட்டியில் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியின் Keymer மூன்று புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

*மற்றொரு போட்டியில் இந்தியாவின் Vidit Gujarathi சக வீரர் நிகால் ஜரீனுக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்றார்.*

***>>>>>><<<<<<***

*துரந்த் கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டத்திற்கு மோகன் பஹான் அணி முன்னேறியுள்ளது.*

***>>>>>>END<<<<<<***